முற்பகல் 10-40

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்தர்களுடைய காலம் பொற்காலம் என்று வரலாற்றிலே படித்திருக்கின்றோம். ஆனால், எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலம்தான் தமிழகத்தினுடைய பொற்காலம் என்று கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம், இந்த அவையிலே காஞ்சிபுரத்திலே இரண்டு இடங்களில் 22.70 ஏக்கர் நிலத்திலே 1,500 அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் 32 மேம்படுத்தப்பட்ட மனைகள் 303 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே செயல்படுத்தப்படும் என்று அறிவித்த வாழும் வரலாறாக விளங்கிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு தொகுதி மக்களுடைய சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட, பெரும்பாக்கம், விசார், விப்பேடு, நரப்பாக்கம், வெங்கடாபுரம், செவிலிமேடு போன்ற பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் தொழில் செய்வதற்கும், நிலத்தடி நீர்மட்டம் உயருவதற்கும், குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வகையிலே, பாலாற்றின் குறுக்கே செவிலிமேடு பகுதியிலே தடுப்பணை கட்ட ஆவன செய்யப்படும் என்று கூறிய பதிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

கால்நடை மருத்துவமனை

***5599—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 5]

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் கிராமத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பத்திலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அங்கே, ஏற்கெனவே ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கிவருகிறது. கால்நடைத் துறை விதியின்படி 3,000 கால்நடைகள் இருக்கின்ற அந்தக் கிராமத்திலே ஒரு கிளை நிலையம் இயங்கி வருகிறது. அது பிற்காலத்திலே 5,000 கால்நடை அலகுகளாக உயரும்போது அங்கே நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒரு மருந்தகத்தை அமைத்துத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு நல்ல சட்டங்களால் ஆளப்படுவதைவிட, நல்ல மனிதரால் ஆளப்படவேண்டுமென்ற சாக்ரடீஸின் கருத்தினை மெய்ப்பிக்கும் வகையில், பாமரனும், பசித்தவனும், பயிலும் மாணவ மாணவியரும், பழுத்த முதியோர்களும் பயன்பெறவும், வறுமையும், ஏழ்மையும் மறையவும், கல்லாமையும், இல்லாமையும் அகலவும், கருவறை முதல் கல்லறை வரை மக்கள் பயன்பெறும் பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்துள்ள எங்கள் அன்புத் தெய்வமாம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் தாயே!

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, எனது சொந்த ஊராட்சியில் பேர்பெரியான்குப்பம் என்னுடைய கிராமம் ஆகும்.

இந்தக் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை இருக்கிறது. 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட எங்களுடைய பகுதிக்கு இந்த மருத்துவமனையை தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவமனையாக அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால் அங்கே 5,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். தற்போது உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமத்திலே 4,440 கால்நடை அலகுகள் இருக்கின்றன. எனவே, 5,000 கால்நடை அலகுகளாக உயரும்போது அங்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலத்தில் அங்கே மருந்தகமாக தரம் உயர்த்தித்தரப்படுமென்று கூறியதற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

சமுதாயக் கூடம்

*11747—**திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—